**Judicial Form No.53**
**(See Rule 42)**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**----**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, SATHANKULAM**
**DATE: 01.07.2024**

**Case No : CC 88 / 2019**

**Deposition of Witness : P.W. 3**

| | |
|---|---|
| **Name:** தீபிகா ராணி | **Caste:** |
| **Father / Husband Name:**பொன் முத்துராமலிங்கம் | **Calling:** |
| **Village:** சின்னமனூர் | **Religion:** |
| **Taluk:** தேனி | **Age: 23** |

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on 01.07.2024**

<u>முதல் விசாரணை:</u>

நான் சின்னமனூரில் குடியிருந்து திருவள்ளூரில் தனியார் நிறுவனத்தில் பணியாற்றி வருகிறேன். அ.சா.1 ஹேமா எனக்கு தெரிந்த நபர் ஆவார். சம்பவ காலத்தில் நான் அவர் வீட்டில் தங்கி திசையன்விளையிலுள்ள விவி பொறியியல் கல்லூரியில் கம்ப்யூட்டர் சயின்ஸ் படித்து வந்தேன். எதிரிகளை தெரியும். ஊரைச் சேர்ந்தவர்கள். கடந்த 5.4.2019ம் தேதி மாலை 5.30 மணியளவில் நான் திசையன்விளையிலுள்ள தீன் ஜெராக்ஸ் கடையில் நான் ஜெராக்ஸ் எடுத்துக் கொண்டு வரும்போது 1ம் எதிரி ஜவஹர் என்னை பார்த்து கண்ணடித்து தவறாக பார்த்தார். 2ம் எதிரியும் என்னை தவறாக அணுகினார். நான் அவர்களிடம் என்ன என்று கேட்டபோது வா என்று என்னை தவறாக அழைத்தார்கள். நான் அவர்களை பார்த்து செருப்பு பிய்ந்து விடும் என சொல்லிவிட்டு நான் வீட்டிற்கு வந்துவிட்டேன். இதை நான் அ.சா.1 ஹேமாவிடன் கூறினேன். மாலை 6.00 மணியளவில் நான் வீட்டின் முன்பு நின்றுகொண்டிருந்தேன். அப்போது அங்கு வந்த எதிரிகள் தேவடியாமவளே என்று ஆபாசமாக பேசி நீ காலேஜில் வேறு ஒரு பையனுடன் பேசிக்கொண்டுதான் இருந்தாய் என்று தப்பாக பேசினார்கள். சம்பவத்தை பார்த்து அ.சா.1 மற்றும் அருகிலிருந்தவர்கள் எதிரிகளை சத்தம் போட்டார்கள். எதிரிகள் போகும்போது ஒழுங்காக இருந்து கொள் இல்லையென்றால் அசிங்கப்படுத்தி விடுவேன் என மிரட்டிவிட்டு சென்றார்கள். இதுசம்பந்தமாக நான் என்

பெற்றோரிடம் கூறினேன். அவர்கள் வந்தவுடன் காவல்நிலையத்தில் நான் புகார் அளித்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் மனுவிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். **(புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை</u>

இல்லை.

Taken down by me in the open court to the presence of the Accused Read over to the witness and admitted by him to be correct.

(S/d)Tmt.C.Kalaiyarasi Reena
Judicial Magistrate,
Sathankulam.

**Judicial Form No.53**
**(See Rule 42)**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**----**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, SATHANKULAM**
**DATE: 01.07.2024**

**Case No : CC 88 / 2019**

**Deposition of Witness : P.W. 4**

| | |
|---|---|
| **Name:** மகாலட்சுமி | **Caste:** |
| **Father / Husband Name:**பொன் முத்துராமலிங்கம் | **Calling:** |
| **Village:** சின்னமனுார் | **Religion:** |
| **Taluk:** தேனி | **Age: 41** |

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on 01.07.2024**

<u>முதல் விசாரணை:</u>

நான் சின்னமனுாரில் குடியிருந்து வீட்டுக்குடித்தனம் செய்து வருகிறேன். அ.சா.3 என் மகள் ஆவார். அ.சா.1 ஹேமா என் தோழி ஆவார். சம்பவ காலத்தில் அ.சா.3 ஹேமா வீட்டில் தங்கி திசையன்விளையிலுள்ள விவி பொறியியல் கல்லுாரியில் கம்ப்யூட்டர் சயின்ஸ் படித்து வந்தார். சம்பவத்திற்கு பின்பு எதிரிகளை தெரியும். கடந்த 5.4.2019 ம் தேதி மாலை 5.30 மணியளவில் என் மகள் அ.சா.3 கடையில் ஜெராக்ஸ் எடுத்துவிட்டு வரும்போது எதிரிகள் தப்பான சைகைகள் காட்டி அழைத்ததாகவும் அதற்கு என் மகள் எதிரிகளை திட்டிவிட்டு வீட்டிற்கு வந்துவிட்டதாகவும், பின்பு மாலை 6.30 மணியளவில் எதிரிகள் என் மகள் வீட்டின் முன்பு நின்றபோது வந்து என் மகளை வேறு ஒருவருடன் பேசிக்கொண்டிருந்ததாக தப்பாக சொல்லி என் மகளை அசிங்கப்படுத்தி விடுவேன் என்றும் கொலைமிரட்டல் விடுத்ததாகவும் அ.சா.3 என்னிடம் போன் மூலம் தகவல் சொன்னார். நானும் என் கணவரும் 6.4.2019 ம் தேதி ஹேமா வீட்டிற்கு வந்து என் மகளை அழைத்துக் கொண்டு காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் மனுவிலுள்ள அறிவேன் சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை</u>

இல்லை.

Taken down by me in the open court to the presence of the Accused Read over to the

witness and admitted by him to be correct.

(S/d)Tmt.C.Kalaiyarasi Reena
Judicial Magistrate,
Sathankulam.

**Judicial Form No.53**
**(See Rule 42)**
DEPOSITION OF WITNESS
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**----**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, SATHANKULAM**
**DATE: 01.07.2024**

**Case No : CC 88 / 2019**

**Deposition of Witness : P.W. 5**

| | |
|---|---|
| **Name:** இசக்கிமுத்து | **Caste:** |
| **Father / Husband Name:** காளிமுத்து | **Calling:** |
| **Village:** இடைச்சிவிளை | **Religion:** |
| **Taluk:** சாத்தான்குளம் | **Age: 42** |

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on 01.07.2024**

முதல் விசாரணை:

நான் இடைச்சிவிளையில் குடியிருந்து தோட்டவேலை செய்து வருகிறேன். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகசரிலுள்ள 1ம் கையொப்பம் என்னுடையதுதான். சுமார் 4 ஆண்டுகளுக்கு முன்பு மாலை 3.00 மணியளவில் போலீசார் சம்பவ இடத்தில் விசாரித்துக் கொண்டிருந்தார்கள். அதில் நானும் என்னுடன் சக்திதரன் என்பவரும் கையொப்பம் செய்தோம். **(பார்வை மகசர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) போலீசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை

காவல் துறையினர் கேட்டுக்கொண்டதற்கிணங்க காவல்நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்து கொடுத்தேன் என்றால் சரியல்ல.

Taken down by me in the open court to the presence of the Accused Read over to the witness and admitted by him to be correct.

(S/d)Tmt.C.Kalaiyarasi Reena
Judicial Magistrate,
Sathankulam.

**Judicial Form No.53**
**(See Rule 42)**
DEPOSITION OF WITNESS
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
----
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, SATHANKULAM**
**DATE: 01.07.2024**

**Case No : CC 88 / 2019**

**Deposition of Witness : P.W. 6**

| | |
|---|---|
| **Name:** சக்திதரன் | **Caste:** |
| **Father / Husband Name:** சிங்கராஜ் | **Calling:** |
| **Village:** இடைச்சிவிளை | **Religion:** |
| **Taluk:** சாத்தான்குளம் | **Age: 35** |

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on 01.07.2024**

முதல் விசாரணை:

நான் இடைச்சிவிளையில் குடியிருந்து மீன்பிடி தொழில் செய்து வருகிறேன். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகசரிலுள்ள 2ம் கையொப்பம் என்னுடையதுதான். சுமார் 4 ஆண்டுகளுக்கு முன்பு மாலை 3.00 மணியளவில் போலீசார் சம்பவ இடத்தில் விசாரித்துக் கொண்டிருந்தார்கள். அதில் நானும் என்னுடன் இசக்கிமுத்து என்பவரும் கையொப்பம் செய்தோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை

காவல் துறையினர் கேட்டுக்கொண்டதற்கிணங்க காவல்நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்து கொடுத்தேன் என்றால் சரியல்ல.

Taken down by me in the open court to the presence of the Accused Read over to the witness and admitted by him to be correct.

(S/d)Tmt.C.Kalaiyarasi Reena
Judicial Magistrate,
Sathankulam.